Previous Date of Examination : 03.11.2020

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா.53 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவதியாகராஜன் | வயது | 54/2022 |
| தகப்பனார் பெயர் | வீரப்பன் | ஜாதி | |
| தொழில் | பத்தர் வேலை | மதம் | |
| ஊர் | மன்னார்குடி | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது மன்னார்குடியில் வசித்துக்கொண்டு பத்தர் வேலை செய்து வருகிறேன். ஆஜர் 1வது எதிரி சக்திவேலை தெரியும். எனது மகள் சர்மிளாதேவி, ஜெயசூர்யா, மருமகன் ஜெயசங்கர் ஆகிய மூவருக்கும் 1வது எதிரி கோர்ட்டில் வேலை வாங்கி தருவதாக சொன்னார். கோர்ட்டில் வேலை இருப்பதாகவும், நம்முடைய சமூதாய மக்களுக்கு வாங்கி தர விரும்புவதாகவும், வேலை வேண்டும் என்றால் சொல்லுமாறும் 2018-ல் 1வது எதிரி சொன்னார். ஒரு நபருக்கு ரூ.2 லட்சம் ஆகும் என்றும், முதலில் ரூ.1 லட்சம் கொடுக்க வேண்டும் என்று சொன்னதால் மூன்று நபர்களுக்கும் சேர்த்து ரூ.3 லட்சத்தை 1வது எதிரியின் வீட்டில் வைத்து 1வது எதிரியிடம் 2018-ம் வருடம் 2 வது மாத வாக்கில் கொடுத்தேன். மூன்று மாதத்தில் வாங்கி தருவதாக சொன்னார். அவ்வாறு வேலை வரவில்லை. பின்னர் பணத்தை கொடுத்துவிடுமாறு நாங்கள் கேட்டோம். அதற்கு பணத்திற்கு நான் கேரட்டி என 1வது எதிரி சொன்னார். 1வது எதிரி எனது உறவினர் என்பதால் மேலும் 3 மாதம் காத்திருந்தேன். அதன்பிறகு சண்டைபோடும் வகையில் ஆகிவிட்டது. அதன்பிறகு வேறொரு நபர் புகார் கொடுத்ததாக தெரியவந்தது. நாங்கள் போய் போலிசிடம் சொன்னபோது எங்களை சாட்சிகளாக சேர்த்துக்கொள்வதாக சொன்னார்கள். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள். நான் பணம் கொடுத்து ஏமாந்த விபரத்தை தெரிந்து கொண்டேன்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

போலிசார் என்னை வரச்சொல்லி நான் சென்றேனா? அல்லது நானாக சென்றேனா? என்றால் போலிசார் வரச்சொன்னதால் சென்றேன். போலிசார் என்னை விசாரித்தபோது 2018 -ம் வருடம் 2வது மாத்தில் பணம் கொடுத்த விபரத்தை சொன்னேன். தேதியை குறிப்பிட்டு சொல்லவில்லை. எனக்கு தேதி ஞாபகம் இல்லை. எனது பிள்ளைகளை கேட்டால் தெரியும். நான் சொல்வதுபோல 1வது எதிரியை நான் சந்திக்கவில்லை என்றும், அவரிடம் பணம் ரூ.3 லட்சம் கொடுக்கவில்லை என்றும், அவ்வாறு கொடுத்திருந்தால் நான் எழுத்துமூல ஆவணம் போலிசாரிடம் கொடுத்திருப்பேன் என்றால் சரியல்ல. போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1வது எதிரியை தெரியும் என்றும், 2வது எதிரியை தெரியாது என்றும் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

Previous Date of Examination : 03.11.2020

# நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

# திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா.54 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | செநதில் | வயது | 41/2022 |
| தகப்பனார் பெயர் | முத்துசாமி | ஜாதி | |
| தொழில் | பெட்ரோல் பங்கில் வேலை | மதம் | |
| ஊர் | தப்ளாம்புலியூர் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தம்ளாம்புலியூரில் வசித்துக்கொண்டு பெட்ரோல் பங்கில் வேலை செய்து வருகிறேன். கடந்த 2018-ம் வருடம் பிப்ரவரி மாதத்தில் 1வது எதிரி சக்திவேல் எனக்கு கவர்மெண்ட் வேலை வாங்கி தருவதாக சொன்னார். முதலில் 1லட்சம் கொடுக்க வேண்டும் என்றும், வேலை வந்த பிறகு 1லட்சம் கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதன்படி நான் ரூ.1 லட்சத்தை 1வது எதிரியின் வீட்டில் வைத்து 1வது எதிரியிடம் கொடுத்தேன். எனக்கு வேலை வரவில்லை. பணமும் வரவில்லை. போலிசார் எஸ்.பி. ஆபீஸிலிருந்து என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

1வது எதிரி அரசாங்க வேலையில் இல்லை என்றால் சரிதான். என்ன வேலை வாங்கி கொடுப்பதாக 1வது எதிரி சொன்னார் என்றால் கவர்மெண்ட்வேலை வாங்கி தருவதாக சொன்னார். எப்படி வேலை வாங்கி தருகிறேன் என்று சொன்னார் என்றால் அவர் வீட்டில் குடியிருக்கும் அம்மா மூலம் சொல்லி வாங்கி தருவதாக சொன்னார். எந்த அம்மா என்று எனக்கு பெயர் தெரியவில்லை. போலிசார் என்னை விசாரித்தபோது கோவிந்தலெட்சுமி என்பவர் நீதிமன்றத்தில் வேலை பார்ப்பதாகவும், அவர் மூலம் வேலை வாங்கி தருவதாகவும் 1வது எதிரி சொன்ன விபரத்தை நான்

சொன்னேன் என்றால் சரிதான். நான் கொடுத்த பணத்தை யாரிடம் கொடுத்தார் என்ற விபரத்தை 1வது எதிரி என்னிடம் சொல்லவில்லை. 1வது எதிரி 2 வது எதிரியிடம் பணம் கொடுத்து ஏமாந்தது சம்பந்தமாக 1வது எதிரி புகார் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. நான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்த போது 2 வது எதிரி இருந்தாரா என்றால் அவர் அப்போது 1வது எதிரி வீட்டில் குடியிருந்தார். நான் பணம் கொடுத்தபோது 2 வது எதிரியையும் வைத்துதான் கொடுத்தேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி நீதிமன்றத்தில் பணிபுரிவதால் அவருக்கு பயந்துக்கொண்டு பணம் கிடைக்காது என்பதால், 2 வது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

கு.வி.(2 வது எதிரி தரப்பில்)

போலிசார் என்னை நேரில் வைத்து விசாரிக்கவில்லை என்றால் சரிதான். போனில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரியிடம் வேலைக்காக கொடுத்த பணத்தை தற்போது வரை கேட்டு வருகிறேன் என்றால் சரிதான். 1வது எதிரி என்ன சொன்னார் என்றால் வழக்கு நடப்பதாகவும், பணத்தை கொடுத்துவிடுவதாகவும் சொல்லி வருகிறார். நான் 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையில் 2 வது எதிரி நீதிமன்றத்தில் வேலை பார்ப்பதாகவும், அவர் மூலம் 1வது எதிரி வேலைவாங்கி தருவதாக சொன்னதாகவும், 1வது எதிரி வீட்டில் 2 வது எதிரி குடியிருந்ததாகவும் சொல்லியுள்ள சங்கதிகள் 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க 2 வது எதிரியை வழக்கில் தொடர்புபடுத்தி பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2 வது எதிரி எங்கு வேலை பார்க்கிறார் என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரித்தபோது நான் 2 வது எதிரியை பற்றிய சொல்லாத நிலையில் 1வது எதிரி பணத்தை திருப்பி தந்துவிடுவதாக சொல்லிய ஆசை வார்த்தையை நம்பி 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க 2 வது எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Previous Date of Examination : 03.11.2020

## நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

## திருவாரூர்

# CC No. 25/2020

2022-ம் ஆண்டு ஜுன் மாதம் 21-ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 55 -ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அகிலரசன் | வயது | 37/2022 |
| தகப்பனார் பெயர் | ராஜாராமன் | ஜாதி | |
| தொழில் | தனியார் துறையில் வேலை | மதம் | |
| ஊர் | மேட்டுப்பாளையம் | தாலுக்கா | திருத்துறைப்பூண்டி |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருத்துறைப்பூண்டி,மேட்டுப்பாளையத்தில் வசித்துக் கொண்டு தனியார் துறையில் வேலை செய்து வருகிறேன். 1வது எதிரி சக்திவேலை தெரியும். எங்கள் ஊரில் செந்தில்குமார் என்பவர் கடை வைத்துள்ளார். அவர் எனக்கு நண்பர் ஆவார். மேற்படி செந்தில்குமார் என்னிடம் கோர்ட்டில் வேலை இருப்பதாகவும், சக்திவேலை போய் பார்த்தால் கிடைத்துவிடும் என்றும் சொன்னார். பிப்ரவரி 2018 ம் வருடம் 1வது எதிரி சக்திவேலை அவரது வீட்டில் போய் பார்த்து ரூ.1லட்சம் பணம் கொடுத்தோம். வேலை கிடைத்தவுடன் பாக்கி ரூ.1லட்சம் பணம் கொடுக்குமாறு சொன்னார். நான் 1வது எதிரியிடம் பணம் கொடுத்தபோது அவரது வீட்டில் அவரது அம்மா, மனைவி, மகன் ஆகியோரும் இருந்தார்கள். ஒரு மாதத்தில் வேலை கிடைத்துவிடும் என்றும், 1வது எதிரியின் வீட்டில் ஜட்ஜ் அம்மா குடியிருப்பதாகவும், அவர் மூலம் கிளார்க் வேலை கிடைத்துவிடும் என்றும் சொன்னார். பின்னர் 2 மாதம் ஆகியும் வேலை கிடைக்காததால் போன் செய்து கேட்டேன். வேலை கிடைத்துவிடும் . வெயிட் செய்யுங்கள் என்று சொன்னார். அதன் பிறகு வீட்டில் போய் 1வது எதிரியை பார்த்தேன். வேலை கிடைத்துவிடும் என்று சொன்னார். பின்னர் வேலை கிடைக்கவில்லை. எஸ்.பி. ஆபீஸிலிருந்து போன் செய்து பணம் கொடுத்தீர்களா? என்று கேட்டார்கள். பின்னர் நான் நேரடியாக எஸ்.பி. ஆபீஸ் போய் விபரத்தை சொன்னேன். அதன்பிறகு தான் நிறையநபர்கள் பணம் கொடுத்து ஏமாந்த விபரமும், நான் ஏமாந்த

விபரமும் எனக்கு தெரியவந்தது. மீண்டும் 1வது எதிரியை கேட்டதற்கு கோர்ட்டில் வழக்கு உள்ளது என்று சொன்னார். போலிசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

போலிசார் என்னை விசாரித்தபோது எந்த தேதியில் எந்த மாதத்தில் பணம் கொடுத்தேன் என்று நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். யார் மூலம் வேலை வாங்கி தருவதாக 1வது எதிரி சொன்னார் என்றால் 1வது எதிரி வீட்டில் ஜட்ஜ் அம்மா குடியிருப்பதாகவும், அவர் மூலம் வேலை வாங்கி தருவதாகவும் சொன்னார். போலிசார் என்னை விசாரித்தபோது முதல் விசாரணையில் சொன்ன விபரத்தைதான் சொன்னேன் என்றால் சரிதான்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)** - இல்லை என தெரிவிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.